
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 1 ஜனவரி - 2021

தனிப்பிரதி ரூ.10/-



# ஓட்டத்தை முடித்தார்

**கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்..**
**தங்கள் பிரசாயங்களை விட்டொழிந்து**
**இளைப்பாறுவார்கள் (வெளி 14:13)**



**காங்கயம் எக்லீசியா வேதாகமக் கல்லூரியில் பயின்று, ஈரோடு மாவட்டம் சென்னிமலை கிறிஸ்துவின் சபை ஊழியராயிருந்த வரும், எங்கள் எல்லோருடைய நெஞ்க்கும் நெருக்கமான வருமாயிருந்த சகோ N. பன்னீர்செல்வம் அவர்கள் 23.12.2020அன்று பரம வாழ்வுக்குள் பிரவேசித்தார்.**

**சகோதரருடைய குடும்பத்தையும், அவர் ஊழியம் செய்த சபையையும் ஜெபத்தால் தாங்குங்கள்**

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| ஒருவர் சபை அங்கத்தின .... | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| சத்தியம் சாத்தியமே | 21 |
| கிறிஸ்துவின் வாழ்க்கை | 25 |
| நம்மைக் குறித்து தேவனு .... | 28 |
| உபதேசங்கள் தேவனுடையது | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor / Publisher**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 34 January- 2021 Issue - 1**

ஆசிரியர் உரை

## ... உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்

ஒப்புக்கொடுக்கிறேன்', 'ஒப்புவிக்கிறேன்' என்னும் வார்த்தைகள் அரிய பயன்பாடு கொண்ட, அதே சமயம் ஆழமும், அர்த்தமும் மிகுந்த வார்த்தைகள். நம்முடைய குடும்ப வாழ்வின் மற்றும் சமுதாய வாழ்வின் முக்கியமான தருணங்களில் இவ் வார்த்தைகளை பயன்படுத்துவோம். நாம் பொதுவாகப் பயன் படுத்தும் 'தருகிறேன்', 'கொடுக்கிறேன்' போன்ற வார்த்தைகள் மேலெழுந்த வாரியான பொருளினடிப்படையில், 'ஒப்புக் கொடுக்கிறேன்', 'ஒப்புவிக்கிறேன்' என்னும் வார்த்தைகளோடு ஒட்டி வருவது போல் தெரிந்தாலும் இவ்வார்த்தைகளுக்கு நிகராகி விடாது. எப்படியெனில், ஒன்றை ஒருவருக்குக் கொடுப்பதற்கோ அல்லது தருவதற்கோ சம்பந்தப்பட்டவரை நாம் முழுமையாக நம்ப வேண்டிய அவசியமில்லை. ஆனால், ஒப்புக்கொடுப்பதற்கு நூறு சதவீதம் நம்பிக்கை கட்டாயம். அந்நம்பிக்கை இல்லா விட்டால் 'ஒப்புக் கொடுத்தால் நடக்காது. 'ஒப்புக் கொடுத்தலில்', அடுத்து என்ன நடந்தாலும் பரவாயில்லை. 'எப்படி முடிந்தாலும் முடியட்டும்' என்னும் உறுதியான தீர்மானம் ஒளிந்திருக்கும்.

ஓர் எடுத்துக்காட்டு கொடுக்கிறேன் கவனியுங்கள். கிறிஸ்தவ திருமணங்களில், திருமணத்தை நடத்தும் திருமணப் பதிவாளர், இப்பெண்ணை இம்மாப்பிள்ளைக்குக் கொடுப்பவர் முன்பாக வரும்படி அழைப்பார். சம்பந்தப்பட்ட பெண்ணின் தகப்பனாரோ அல்லது அதற்கு இணையான தகுதியுள்ளவரோ முன்பாக வந்து, பெண்ணின் வலது கையைப் பிடித்து மாப்பிள்ளையின் வலது கரத்தில் ஒப்புக்கொடுப்பார். இச்செயல் முழு நம்பிக்கையோடு நடக்கும். இனி என்ன நடந்தாலும், எப்படி வாழ்ந்தாலும், எப்படி

முடிந்தாலும், அவர் தான் என் மகளுக்குப் பொறுப்பு என்பதே அந்நம்பிக்கை. இதுதான் ஒப்புக் கொடுத்தல். ஓரளவு புரிந்தி ருக்கும் என நம்புகிறேன்.

சரி, இதற்கு இணையான, இன்னும் சொல்லப்போனால் இதற்கு மேலான ஓர் ஒப்புக்கொடுத்தல் பற்றித்தான் பவுலடியார் அப்போஸ்தலர் 20:32 பேசியுள்ளார். இப்பொழுதும் **சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனை வருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்** என்று.

இங்கே பவுல் பேசும் இந்த ஒப்புக்கொடுத்தலுக்கான பின்னணி பற்றி நமது ஆசானின் ஆசாரப்படி பார்த்து விடுவோம்.

கிறிஸ்துவின் நற்செய்தியைப் பார் எங்கும் பரப்புவதில் படு மும்முரமாகச் செயல்பட்டு வந்த பவுலடியார் தனது மூன்றாவது நற்செய்திப் பயணத்தில் இருந்தார். குறிப்பாக, எருசலேமை நோக்கிய பயணத்தில். அப்பயணத்தின் ஒரு கட்டத்தில் அவர் பயணித்த கப்பல் மிலேத்து பட்டணம் வந்தடைந்தது. ஒரு மூன்று நாள் அங்கே தங்கியிருக்கும்படியான வாய்ப்பு. கிறிஸ்துவின் நற்செய்தி ஊழியம் அவருடைய பேச்சும், மூச்சுமாக இருந்த படியால் அந்த மூன்று நாட்களை வெறுமனே கழிக்க மனமில்லை. எபேசு பட்டணம். அங்கிருந்து 28 மைல்கள் தொலைவில் இருப்பதை அறிந்து கொண்டு, ஆள் அனுப்பி, சபை மூப்பர்களை வரவழைத்தார். அச்சந்திப்பு உணர்வுப்பூர்வமாக, உள்ளப்பூர்வமாக மாத்திரம் இராமல், பக்திப்பூர்வமாகவும் இருந்தது. ஆம், ஆலோசனைகள், அறிவுரைகள் மற்றும் எச்சரிப்புகளின் கூட்டுக் கலவையாக அமைந்தது.

இச்சந்திப்பில் கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகவும், கிறிஸ்து வின் ஊழியக்காரனாகவும் அவர்களிடம் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து, அவர்களுக்கான தனது ஆவிக்குரிய கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டேன் என்பதை இவ்விதம் குறிப்பிடுகிறார். **தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லோருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறன் என்று** [20:26,27].

மேலும், தான் சரீரத்தில் அவர்களை மீண்டும் சந்திக்க வாய்ப்பில்லாத நிலையில், தான் பெரும் முயற்சி செய்து ஆரம்பித்த சபையாகிய மந்தையைச் சீர் குலைத்துச் சிதறடிக்கும்

கொடிதான ஓநாய்கள் உங்களிலிருந்து எழும்பி, நீங்கள் ஏற்றுக்கொண்ட ஒன்றான மெய் சபைக்கும், நீங்கள் கீழ்ப்படிந்து ஒன்றான மெய் சுவிசேஷத்திற்கும், நீங்கள் கைக் கொண்டு வரும் கிறிஸ்துவின் உண்மையான உபதேசத்திற்கும் மாறு பாடானவைகளை போதிப்பார்கள் என்று எச்சரித்ததோடு மூன்று வருடங்கள் தான் கண்ணீரோடு பட்ட பாடுகளை நினைத்து, விழித்திருந்து உங்களைத் தற்காத்துக் கொள்ளுங்கள் என்று உணர்ச்சி பொங்க மன்றாடுகிறார் (20:39-31).

மேலும், தான் சரீரத்தில் அவர்களை மீண்டும் சந்திக்க வாய்ப்பில்லாத நிலையில், தான் பெரும் முயற்சி செய்து ஆரம்பித்த சபையாகிய மந்தையைச் சீர் குலைத்துச் சிதறடிக்கும் கொடிதான ஓநாய்கள் உங்களிலிருந்து எழும்பி, நீங்கள் ஏற்றுக்கொண்ட ஒன்றான மெய் சபைக்கும், நீங்கள் கீழ்ப்படிந்த ஒன்றான மெய் சுவிசேஷத்திற்கும், நீங்கள் கைக் கொண்டு வரும் கிறிஸ்துவின் உண்மையான உபதேசத்திற்கும் மாறு பாடானவைகளை போதிப்பார்கள் என்று எச்சரித்ததோடு மூன்று வருடங்கள் தான் கண்ணீரோடு பட்ட பாடுகளை நினைத்து, விழித்திருந்து உங்களைத் தற்காத்துக் கொள்ளுங்கள் என்று உணர்ச்சி பொங்க மன்றாடுகிறார் (20:39-31).

இந்த மன்றாட்டிலும் திருப்திப்படாமல், இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும், உங்களுக்கு சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் என்றார் (20:32). மறுபடியும் சொல்லுகிறேன். ஒப்புக்கொடுத்தல் என்பது முழுமையான நம்பிக்கையை உள்ளடக்கியது. பவுலடியார் எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்களை, தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் ஒப்புக்கொடுக்கிறார் என்றால் அதன் பொருள் என்ன? பவுலடியார் தேவன் மீது கொண்டிருந்த அபார நம்பிக்கையையும், அவருடைய வார்த்தைகள் மீது வைத்திருந்த ஆழ்ந்த பிடிப்பையும் அது பறைசாற்றுகிறது.

இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தலுக்குப் பிறகு தான், அவரால் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்திருக்கிறது! ஆம், அதன் பிறகே அவர்களோடு சேர்ந்து முழங்கால்படியிட்டு ஜெபித்துள்ளார்.என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்க மாட்டீகளென்று அவன் சொன்ன வார்த்தையைக் குறித்து அதிகமாய் துவக்கப்பட்டு அழுது, கழுத்தை கட்டிக் கொண்டு முத்தம் செய்து, கப்பல் வரைக்கும் போய் வழியனுப்பி வைத்தனர். (20:36-38).

இப்பொழுது பவுலடியாரின் இந்த ஒப்புக்கொடுத்தலிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I **ஒப்புக் கொடுப்பதால் பக்தி விருத்தியடைகிறது**

தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் ஒருவர் ஒப்புக்கொடுப்பதால் கிடைக்கும் முதல் பலன் பக்தி விருத்தி.

பக்தி என்பது தேவன் மீது கொண்டிருக்கும் ஆழமான அன்பு. இறை உணர்வு கொண்டவர்களிடம் பொதுவாக கடவுள் மீது அன்பு இருக்கும். ஆனால், பக்தி என்பது அதைத் தாண்டின ஓர் நிலை. தன் இறை நம்பிக்கைக்காக எதைச் செய்வதற்கும் அல்லது செய்யாமலிப்பதற்கும் தயாராயிருப்பது. பவுலடியார் போன்ற தேவ மனிதர்கள் இப்படிப்பட்ட பக்தி கொண்டவர் களாகவே இருந்துள்ளனர். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நட்டமென்று விடவும், குப்பையுமாய் எண்ணவும் (பிலி.3:11) கிறிஸ்து எனக்க ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்ல முடிந்ததென்றால் அதற்குக் காரணம் பயபக்தி தான்.

எபேசு பட்டணத்து சபையார் கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தின போது இப்படிப்பட்ட பக்தியுடைய வர்களாகவே இருந்துள்ளனர். அவர்களின் பக்தி விருத்தியடைய வேண்டுமென்பது பவுலின் விருப்பமாக இருந்துள்ளது. விருத்தி என்றால் **பெருக்கம்**. அதாவது, இருக்கிற நிலையிலேயே இல்லாமல் பெருகிக் கொண்டும், வளர்ந்து கொண்டும் போக வேண்டும். ஆதியிலே ஆதாமையும், ஏவாளையும் படைத்த தேவன், **பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்** என்றே கட்டளை கொடுத்தார் (அதி. 1:28). நமது தேவன் விருத்தியை விரும்பு கிறவராகவும், பெருக்கத்தைக் கட்டளையிடுகிறவராகவும் உள்ளார்.

பக்தி விருத்தி சம்பந்தமாகப் பல வசனங்களை நாம் புதிய ஏற்பாட்டில் காண முடியும். முதல் நூற்றாண்டில், யூதேயா, கலிலேயா சமாரியா நாடுகளிலிருந்த சபைகள் சமாதானம் பெற்று, **பக்தி விருத்தியடைந்து,** கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின (அப். 9:31) என்று வாசிக்கிறோம். பவுலடியார் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதின போது, ஆனபடியால் சமாதானத்திக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய **பக்திவிருத்தி** உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் (14:19) என்று கூறுகிறார்.

இங்கே கேள்வி என்னவெனில், பக்தியை எப்படி விருத்தியாக்குவது? என்பதே. இக்கேள்விக்கான பதிலாகப் பவுடியார் எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுப்பது, **தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுங்கள்** என்பது. நன்றாக கவனியுங்கள் ஆம், நம்முடைய பக்தியை விருத்தியாக்குவதற்கான ஒரே வழி இது தான். அதாவது, தேவன் மீதும், அவருடைய வார்த்தைகளின் மீதும் முழு நம்பிக்கை வைத்து விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தேவக் காரியங்களில் வாஞ்சையோடும், வைராக்கியத்தோடும் ஈடுபட வேண்டும். இன்னும் சொல்வ தென்றால், தேவன் தம்முடைய வார்த்தைகளில் வெளிப் படுத்தியிருக்கும். உபதேசச் சட்டங்களுக்கு நம்மைச் சமூலமாகக் கீழ்ப்படுத்த வேண்டும். பக்தியை விருத்தியாக்க மனிதர்கள் மேற்கொள்ளும் எல்லா வழிகளைக் காட்டிலும் இதுவே சிறந்த வழி. இது தான் வேதாகமம் போதிக்கும் ஒரே வழி.

அப்படியானால், அருமையானவர்களே! பக்தி விருத்திக்கான செயல்களில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? பக்தி விருத்தி என்னும் பதத்தில் இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளது. ஆம், **பக்தி** மற்றும் **விருத்தி.** எபேசு பட்டணத்து சபையார் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததன் மூலம் பக்தி என்னும் நிலைக்குள் ஏற்கனவே வந்ததால், பவுல் அங்கே **விருத்தி** பற்றிப் பேசுகிறார். பக்தியும், விருத்தியும் **தேவனுக்கும்,** அவருடைய **கிருபையுள்ள வசனத்துக்கும்** ஒப்புக் கொடுப்பதாலேயே வருகிறது. அது என்ன, கிருபையுள்ள வசனம் என்கிறீர்களா? யோவான் ஆசிரியர், **கிருபையும், சத்தியமும்** இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின ( யோவான் 1:17) என்கிறார். ஆகையால், **இயேசுவின் மூலம் கொடுக்கப்பட்ட வார்த்தைகளே கிருபையுள்ள வார்த்தைகள். இந்தக் கிருபை வார்த்தைகள்** நமக்குப் புதிய ஏற்பாட்டில் தான் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. நாம் மெய்யான இறைப்பக்திக்குள்ளாக வரவும், அப்படி வந்து அதை விருத்தியாக்குவதற்கான வழி அதற்கு நம்மை ஒப்புக் கொடுப்பது தான். இந்த உண்மையைப் புரிந்து செயல்பட நாம் நம்மைத் தயாராக்குவோம். அப்படிச் செய்வதன் மூலம் கர்த்தர் காணக்கொடுத்த இப்புதிய ஆண்டில் ஆசீர்வாதத்தின் மக்களாக மாறுவோம்.

### II ஒப்புக் கொடுப்பதால் சுதந்தரத்தில் பங்கடைய முடிகிறது.

தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் நம்மை ஒப்புக் கொடுப்பதால் கிடைக்கும் இரண்டாவது பலன் பரலோக சுதந்தரம்.

ஒப்புக் கொடுத்தல் பற்றி பேசும் பவுலடியார், நீங்கள் எந்த தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அந்த தேவன் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கும் வல்லமை பெற்றவர் என்று கூறுகிறார். பொதுவாக சுதந்தரம் என்பது இன்னொருவரிடமிருந்து பெறுவது. இது குறித்துப் பவுலடியார், கொலோசெ பட்டணத்துக்கு எழுதின நிருபத்தில் இப்படியாகக் குறிப்பிடுகிறார். **நீங்கள் கர்த்தருடைய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்** என்று [கொலோ. 3:23,24].

பவுலடியார் பேசும் சுதந்தரம் குறித்துப் பேதுரு அப்போஸ்தலன் எழுதும் போது, அது **அழியாதது, மாசற்றது, வாடாதது** என்ற குறிப்பிடுகிறார் [I பேதுரு .1:4]. அத்தோடு அது எப்பொழுது, எங்கே கிடைக்கும் என்றும் வெளிப்படுத்தியுள்ளார். கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறது என்று [I பேதுரு 1:5]. இப்படிப்பட்ட ஒரு சுதந்திரத்தைத் தான் எபேசியர் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், அந்த சுதந்தரத்தை உங்களுக்குக் கொடுக்க தேவன் வல்லவராக இருக்கிறார் என்றும் கூறி, அவர்களை தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனங்களுக்க்கும் ஒப்புக் கொடுத்தார்.

இக்குறிப்பிட்ட வசனத்தில், சுதந்தரம் பற்றிய இன்னொரு கருத்தையும் பதிவு செய்துள்ளார் பவுலடியார்.**பரிசுத்தமாக்கப் பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்கான சுதந்தரம்** என்று. இந்த உண்மையைப் பவுல் அப்போஸ்தலன் அழகாக விவரித்துள்ளார். **நல்ல போராட்டத்தைப் போராடினேன்! ஓட்டத்தை முடித்தேன்., விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என்று** [II தீமோ 4:7,8]. ஆம், பரலோக சுதந்தரம் தகுதியுள்ள அனைவருக்கும் கிடைக்கும்.

இந்த சுதந்திரத்திற்காகப் பவுலடியார் கோடிட்டுக் காட்டும் தகுதி **பரிசுத்தம்** இந்தப் பரிசுத்தமாகுதல் தேவனுடைய வசனத்தினாலே நடக்கக்கூடிய ஒன்று இயேசு ஆண்டவர் தன்னுடைய ஜெபத்தில்

சொல்லியுள்ளார். **உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரி சுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம் என்று** (யோவான். 17:17). இன்னும் எபிரெயர் ஆசிரியர், நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த **கிறிஸ்துவினுடைய இரத்தம்** ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளைச் **சுத்திகரிப்பது** எவ்வளவு நிச்சயம் (எபி. 9:14) என்று கூறுகிறார். ஆக, பரிசுத்தம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே என்று அறிகிறோம். அதாவது, **சத்தியத்தினாலே கிறிஸ்துவின் இரத்தத்தைக்** கொண்டு பரிசுத்தமாக்கப்பட்டு, கிறிஸ்துவின் போதனைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுத்து நம்முடைய பக்தி வாழ்வை விருத்தி செய்கிறவர்களாக இருந்தால் **பரலோக சுதந்தரத்தில்** பங்கடைவோம்.

அப்படியானால், அன்பானவர்களே! பரலோக சுதந்தரத்தை உறுதி செய்வதில் நாம் எந்த இடத்தில் உள்ளோம்? எபேசு சபையார் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களாக இருந்த நிலையில்தான், **ஒப்புக்கொடுக்கிறேன்** என்று கூறி யுள்ளதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. ஆம், பரலோக சுதந்தரத்தை நாம் போகிற போக்கில் பெற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணி ஏமாந்து போக வேண்டாம். புரிகிறதா? ஆகையால், கர்த்தர் கூட்டிக் கொடுத்த இப்புதிய ஆண்டில், பரலோக பாக்கியத்துக்கான சகல முயற்சிகளிலும் நம்மை ஈடுபடுத்துவோம்.

### III ஒப்புக் கொடுப்பதால் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக் கொள்ள முடியும். .

தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் ஒருவர் ஒப்புக்கொடுப்பதால் கிடைக்கும் இன்னொரு மேலான பலன் கிறிஸ்துவின் சிந்தை.

கிறிஸ்துவைப் பின்பற்றும் தேவப்பிள்ளைகள் ஒவ்வொரு வரும் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்பது ஆவியானவரின் அறிவுரையாக உள்ளது. ஆகவே தான், பவுலடியாரைக் கொண்டு பிலிப்பு பட்டணத்து சபையாருக்கு, **கிறிஸ்து இயேசுவிலிருந்து சிந்தையே** உங்களிலும் இருக்கக் கடவது (பிலி. 2:5) என்று கூறியுள்ளார். கிறிஸ்துவின் சிந்தை எவையென்று ஒரு பட்டியல் தயாரித்தால், அப்பட்டியலில் கண்டிப்பாகக் **கிறிஸ்துவின் ஒப்புக்கொடுத்தல்** இடம் பெறாமல் போகாது. கிறிஸ்துவின் ஒப்புக்கொடுத்தல் அலாதியானது.

அந்த ஒப்புக் கொடுத்தல் பற்றி வார்த்தைகளால் வர்ணிக்கும் தகுதி எனக்குக் தகுதி எனக்குக் கண்டிப்பாக இல்லை. இதை சிரம் தாழ்த்தி ஒப்புக்கொள்கிறேன். கிறிஸ்துவின் ஒப்புக்கொடுத்தல் குறித்து எபேசியர் நிருபத்தில் வரும் வரிகளைக் கொஞ்சம் கவனியுங்களே. **கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்** (எபே.5:2).

இப்படித் தன் வாழ்வையும், தன் சரீரத்தையும் சுகந்த வாசனையான பலியாக ஒப்புக்கொடுத்த இயேசு ஆண்டவர், இறுதியில், **பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்** என்று மகா சத்தமாய்க் வப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனைவிட்டார் (லூக்கா.27:46). ஆக, ஒப்புக் கொடுத்தல் என்பது கிறிஸ்துவின் சிந்தைகளில் ஒன்றாக உள்ளது. இந்த விதமான ஓர் ஒப்புக் கொடுத்தல் தான் கிறிஸ்து வைப் பின்பற்றும் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கப்படுகிறது. ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான **ஜீவ பலியாகக் ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று.** தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளு கிறேன் ( ரோமர். 12:1) என்று.

அருமையானவர்களே! கர்த்தர் கிருபையாகக் கூட்டி வழங்கின இப்புதிய ஆண்டை ஆசீர்வாதமாக, சமாதான மானதாகக் கழிக்கத் தேவையானவைகளில் மிக முக்கியமானது கிறிஸ்துவின் சிந்தை. அச்சீரிய சிந்தைகளில் ஒன்றுதான் ஒப்புக்கொடுத்தல். இந்த ஒப்புக் கொடுத்தல், இம்மைக்கும், மறுமைக்குமான ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க உத்திர வாதமளிக்கிறது. நம்மைப் போன்ற மனிதர்களாகிய ஆபிரகாம் (ஆதி.22:12). பவுலடியார் போன்றவர்கள் இதற்கு மிகச்சிறந்த சான்றுகளாக உள்ளனர்.

ஆகையால், தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் ஒப்புக்கொடுப்பதால் கிடைக்கும் பலன்களைப் புரிந்து, இப்புதிய ஆண்டில் கிறிஸ்துவுக்குள் பெருவாழ்வு வாழ்வோம்.

பரலோக சுதந்தரத்தை வாக்களிக்கும் சர்வவல்ல தேவனுடைய காக்கும் கரங்கள் உங்கள் அனைவரோடுங் வட இருப்பதாக! ஆமென்!! ஆமென்!!!

# ஒருவர் சபை அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட முடியுமா?

Bro. J.C. **சோட்**

**ஒ**ருவர் சபை அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட முடியுமானால், பழைய ஏற்பாட்டில் வரப்போகிற ராஜ்யத்தைக் குறித்து ஏன் இத்தனை தீர்க்கதரிசனங்கள் இருக்கின்றன? புதிய ஏற்பாட்டில் அது சபையாக ஏன் அடையாளப்படுத்தப்படுகிறது? அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்ஜியத்தை எழும்பப் பண்ணுவார் (தானியேல் 2:44) என்று வாசிக்கிறோம்.

இன்னும், யோவான் ஸ்நானகன் மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறதென்று ஏன் பிசங்கித்தார்? இங்கே ராஜ்யம் என்பது சபையைக் குறிக்கிறது (மத்தேயு 3:8).

இயேசு கிறிஸ்து எதற்காக... கலிலேயாவிலே வந்து தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, காலம் நிறைவேறி, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந் திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்று ஏன் பிரசங்கிக்க வேண்டும்? (மாற்கு 1:14,15).

இயேசு கிறிஸ்து பேதுருவின் அறிக்கைக்கு ஏன் இப்படி பதிலளிக்க வேண்டும். சீமோன் பேதுரு பிரதியுத்தமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி; யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்ட விழ்க்கப்பட்டிருக்கும் என்றார் (மத். 16:16–19).

கிறிஸ்து ஏன் சபையை கட்ட வேண்டும்? அதற்காக மரிக்க வேண்டும்? அதற்காக வருவேன் என்று ஏன் வாக்குத்தத்தம் பண்ண வேண்டும்? கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே.5:23,28). ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத் தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழு வதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் (அப்.20:27). நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் (யோவான் 14:3).

கிறிஸ்து ஏன் அந்த சபைக்காக ஏன் மரிக்க வேண்டும்? அதன் தலைவராக இருக்க வேண்டும்? அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ. 1:18). தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப்.2:47).

வேதாகமம் ஏன் சபையை அதிகமாகப் பேச வேண்டும்? மத்தேயு. 16:18; 18:17 அப்போஸ்தலர் 2:27; 5:11;8:13; ரோமர் 16:15; I கொரி. 1:2; 4:17; 10:32; II கொரி. 1:1; கலாத்தியர் 1:13; எபேசியர் 1:22; பிலிப்பியர் 3:6; 4:15: I தெச. 1:1; II தெச 1:1; தீமோ. 3:5,15 5:16; பிலேமோன் 1:2; எபிரெயர் 12:23; யாக்கோபு 5:14;3 யோவான் 1:6,9,10; வெளி.2;1,8,12,18; 3:1,7,14, இந்தவசனப் பகுதிகள் சபையை ராஜ்யம், சரீரம், மணவாட்டி, குடும்பம் என்று அடையாளப்படுத்துகின்றன.

கர்த்தர் தம்முடைய பெயரை சபை தரித்துக்கொள்ள ஏன் அனுமதித்தார்? இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு [எபே.3:14,15]. உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர். அவராலேயன்றி வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாம மேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் [அப்.4:10-12]. உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல் நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள் [யாக்.2:7]. ஒரு வரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்து வின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் [ரோமர் 16:16].

நாம் எதற்காக எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரு சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாக தாகந்தீர்க்கப்பட்டோம்? [I கொரி. 12:13].

தேவன் ஏன் கிறிஸ்துவை சபையில் எல்லாவற்றிற்கும் மேலாக வைக்க வேண்டும்? [எபேசியர் 1:22].

கிறிஸ்து தலையாகவும், சபை அவருடைய சரீரமாகவும் எதற்காக ஒப்புமை செய்யப்பட்டிருக்கிறது? தலை அதன் சரீரத்திற்கு எந்த வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததில்லையென்று சொல்லும் அளவுக்கு நம்மில் யாரும் மூடர்களில்லை. தேவன் அவ்வார்த்தையை வேதாகமத்தில் இடம்பெறச் செய்த போது இவ்வார்த்தையை நாம் தவறாகப் புரிந்துகொள்ள கூடாது என்று தான் தீர்மானித்தார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைதான் இவ்வுலகிலேயே மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. ✝

பெண்கள் பகுதி

# என் வாழ்வில் தேவனுடைய திட்டம் என்ன ?

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே ! இந்த புத்தாண்டு 2021–ஐ காணச் செய்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். வேத வனங்கள்தான் நம்மை எல்லாக்காலங்களிலும் பலப்படுத்துகிறது. வேதத்திலிருந்து தேவ திட்டங்கள், அவரின் எதிர்பார்ப்பு, நாம் செய்யவேண்டியவைகள் இப்படி அனைத்துமே நாம் கற்றுக்கொள்ள முடியும். இம்மாதமும் அப்படியே வசன ஆதாரங்களுடன் காரியங்களை கற்றுக்கொள்வோம். குறிப்பாக மூன்று தேவ திட்டங்கள் பற்றி இம்மாதம் பார்ப்போம்.

**நம் வாழ்வில் தேவனின் முதலாவது திட்டம் : (வெளி 4:11)**

தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தார். அவருடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது. எனவே, அவர் மகிமைக்கும், கனத்துக்கும், பாத்திரராயிருக்கிறார். ஏசயா 43:7ல், நான் என் மகிமைக்கென்று கிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டு வா என்பேன் என்று வாசிக்கிறோம். தேவன் நம்மை சிருஷ்டித்ததின் நோக்கமே தம்மை மகிமைப்படுத்து வதற்குத்தான் ( I கொரி :6:20)–ல் பார்க்கும்போது இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைக் கொண்டு கிரயமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இயேசு மரித்ததினாலே நீங்களும், நானும் இப்பூமியிலும் வாழ்வைப் பெற்றிருக்கிறோம். பரலோகத்திலும் வாழும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய சரீரமும், ஆவியும் தேவனுக்குச் சொந்தமானது. எனவே, சரீரத்தினாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். இதுவே நம்மைக் குறித்து தேவனுடைய திட்டமாயிருக்கிறது.

**நம் வாழ்வில் தேவனின் இரண்டாவது திட்டம் : (மத் : 28:1820)**

தேவன் இயேசுவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொடுத்துள்ளார். அவர் மூன்று காரியங்களை நமக்கு கட்டளையாகக் கொடுத்துள்ளார்.

அ. போ

ஆ. சீஷராக்கு

இ. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடு. அவர்கள் கீழ்ப்படிந்த பிறகு,தேவனுடைய சித்தம் இன்னதென்று தொடர்ந்து போதித்து கொண்டேயிரு.

எல்லா மனிதர்களும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மனந்திரும்புதல் என்றால் என்ன ? II கொரி : 7:10 ஒரு மனிதன் தான் விரும்பியபடி தனக்கும், சாத்தானுக்கும் சேவை செய்வதை நிறுத்திவிட்டு, திரும்ப தங்கள் வாழ்வை தேவனிடத்திற்கு திருப்புவது மனந்திரும்புதல் ஆகும். ஏனென்றால், ஒருநாள் வரப்போகிறது, அந்த நாளிலே எல்லோரையும் அவர் நீதியாய் நியாயந்தீர்ப்பார். நீதி என்றால் என்ன ? உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் (சங் : 119:172). மேலும், (யோவான் 12:48)ன் படி புதிய ஏற்பாட்டில் இயேசு சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்று வாசிக்கிறோம்.

சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைச் சொல் என்ற கட்டளையை நாம் வித்தியாசமான பல முறைகளிலும் கையாளலாம்.

a. பெண்கள், குழந்தைகள் மத்தியிலே சென்று வசனத்தை கற்றுக்கொடுக்கலாம்.

b. நம் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கலாம்.

c. நம் கனவன்மார்கள் போய், போதிப்பதற்கு உதவி செய்யலாம்.

d. யாராவது தங்களை அர்ப்பணித்து போய், ஊழியம் செய்தால் அவர்களுக்கு நாம் உதவி செய்யலாம்.

e. என்னால் போதிக்க முடியவில்லையென்றால், போதிக்க முடிந்தவர்களிடம் பிறரை அழைத்துக்கொண்டு வரலாம்.

இப்பஜ நாம் ஆத்தும ஆதாயம் செய்வது நமக்கான தேவனுடைய திட்டமாயிறுக்கிறது.

**என் வாழ்வில் தேவனின் மூன்றாவது திட்டம் : (எபே :2:10)**

நற்கிரியைகளை செய்வதற்காகவே நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், நம் கிரியைகள் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்க வேண்டும். அப்படியானால், கிறிஸ்துவுக்குள் எப்படி சேர முடியும்? (கலா:3:27) நாம் என்னென்ன நற்கிரியைகள் செய்யவேண்டுமோ அதையெல்லாம் தேவன் முன்னதாகவே நமக்காக ஆயத்தம் செய்துவைத்து விட்டார்.

**ஏன் இவர்களுடைய கிரியைகளை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை? மத். 7:21 23)**

21.1 இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தார்கள்.

22.2 சில நற்கிரியைகளைச் செய்தார்கள்.

23.3 ஆனால் அவை இயேசுவுக்கும், தேவனுக்கும் ஏற்புடையதாய் இருக்கவில்லை.

21.4 ஏனென்றால், அவர்கள் **பிதாவின் சித்தத்தின்படி செய்யவில்லை.**

பிரியமானவர்களே, தேவ திட்டங்களைப் பார்த்தோம். நாம் அதன்படி செய்கிறோமா ? யோசித்துப் பார்ப்போம். அடிப்படை உண்மைகளையும், வேலைகளையும் விட்டு விட்டு நாம் இச்சித்தவைகளையெல்லாம், நமக்கு பெருமை சேர்க்கிற விஷயங்களில் குறியாயிருந்து அதையே செய்து நானும் கிறிஸ்துவின் பிள்ளை அவர் திட்டம்தான் என் வாழ்வில் நடந்துகொண்டிருக்கிறத என்று எண்ணி, நம்பி, ஏமாந்தும் போய், ஏமாற்றுக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எளிமையான, உண்மையான தேவ திட்டத்தை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு பெரிய பெரிய திட்டங்களும், நமக்குப் பெருமை யாய் தோன்றுகிறவைகளையும் நம் சாமார்த்தியத்தில் செய்து விட்டு, தேவ சித்தத்தை உணராமல், தேடாமல் மறந்தே போய் விடுகிறோம். எனவேதான், பல விதமான கவலைகளால் சூழப் பட்டு, வாழ்க்கையை வெறுத்து எல்லாம் இருந்தும் ஒன்றுமே இல்லாதவர்கள் போல மகிழச்சியை இழந்து, சுகத்தை இழந்து, ஒரு வித பய உணர்வோடு வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டு இருக்கிறோம்.இயேசு சொன்னவைகளை, தேவ திட்டத்தை உணர்ந்து செயல்பட்டால் நுகம் மெதுவாயும், சுமை இலகு வாயு ருக்கும். கர்த்தர் கூட்டிக் கொடுத்த இந்த புதிய ஆண்டில் அப்படிச் செய்ய தேவன் உதவி செய்ய ஜெபிப்போம். ஆமென் ! ஆமென் !

# ... வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் ?

Dr. **ஏபில் நாயகம்**

**பி**ரியமான வாலிபர்களே ! உங்கள் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். 2021 நம் அனைவருக்கும் எல்லா வகையிலும் ஆசீர்வாதமான ஓர் ஆண்டாக இருக்க தேவன் அநுக்கிரகம் புரிவாராக தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ இந்த ஆண்டிலும் நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம். அவருடைய ராஜ்யமாகிய சபையிலே நம் கடமையை ஆற்ற உறுதியெடுப்போம். கர்த்தர் நல்லவர் என்பதை அனுதினமும் ருசித்துப் பார்க்கத் தீர்மானம் எடுப்போம்.

இந்த ஆண்டின் முதல் மாதத்தில் நம்மை தேவன் பக்கமாக திருப்பும் வகையிலே, நம்மை சந்திக்க வைக்கவும் அதேசமயம் நம்மை உற்ச்சாகபடுத்தவும் உதவியாக இருக்கும் வசனப் பகுதியை மையமாக வைத்து எழுதலாம் என்று நினைத்து மீகா 6:8 ம் வசனத்தை தேர்ந்தெடுத்து இருக்கிறேன்.

மீகா என்ற தேவனுடைய தீர்த்ததரிசி, இஸ்ரவேல் மக்களுக்கு சொல்லும் காரியங்கள் மீகா 6 ஆம் அதிகாரத்தில் இருக்கிறது. மீகா 6 ஆம் அதிகாரம் முதல் ஐந்து வசனங்களை வாசிப்பீர்களானால், அங்கே தேவன் இஸ்ரவேல் ஜனங்கள் மீது அதிருப்தியாய் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். வசனம் 2 ல் கர்த்தருக்கு அவர் ஜனத்தோடே வழக்கு இருக்கிறது. என்று மீகா கூறுவதை வாசிக்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு மத்தியில் பாவமான செயல்கள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. எல்லா நிலைகளிலும் பாவம் இருந்தது. தேவன் எதிர்பார்த்திருந்த உண்மை கீழ்ப்படிதல் போரை நற்குணங்கள் இல்லாமல் கொள்ளை, பொய், மனிதர்களை மதிக்காமல் இருப்பது போன்ற தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை தங்கள் அன்றாட வாழ்வில் செய்து கொண்டு வந்தார்கள். இது தேவனுடைய பார்வையில் விசனமாய் இருந்தது.

எனவே, மீகாவைக் கொண்டு தேவன் தம் ஜனமாகிய இஸ்ரவேலரோடு வழக்காடுகிறார். வசனம் 3 ல் என் ஜனமே, நான்

உனக்கு என்ன செய்தேன் ? நான் எதினால் உன்னை விசனப்படுத்தினேன் ? எனக்கு எதிரே உத்திரவு சொல் என்று வழக்காட அழைக்கிறார். வசனம் 4 மற்றும் 5 ல் தேவன் அவர்களை எப்படியாக வழிநடத்திக் கொண்டு வந்தார் என்பதை நினைப்பூட்டுகிறார். தேவன் அவர்களை வழிநடத்தின ஒவ்வொரு சம்பவத்தையும் நினைப்பூட்டி இப்படியெல்லாம் செய்தேனே, ஏன் எனக்குப் பிரியமில்லாமல் நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்கிறார்.

ஆனால், வழக்கம் போல் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை தவறாகவே புரிந்து கொண்டனர். ஆறாம் வசனத்தையும், ஏழாம் வசனத்தையும் வாசிக்கும் போது, தங்களுடைய காணிக்கை களினாலும், பலிகளானலும் தேவனைப் பிரியப்படுத்திட முடியும் என்ற தவறான எண்ணத்தோடு கேள்விகளை கேட்பதைக் கவனிக்க முடியும். ஆனால், தேவன் அதை எதிர்ப்பார்க்கவில்லை என்பதை உணராதிருந்தார்கள்.

எனவே தான், 6 :8 ல் **மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்.** நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் என்று மீகா கேட்பதை வாசிக்க முடியும்.

ஆம், தேவன் இஸ்ரவேலரிடம் அவர்களின் நன்னடக்கை யையும், உண்மையையும், நீதியும் உள்ள வாழ்க்வையும்தான் எதிர்ப்பாத்தார். ஆனால், அவர்கள் காணிக்கைகளினாலும், பலிகளினாலும் அவரை பிரியப்படுத்தலாம் என நினைத்தார்கள்.

பிரிமானவர்களே, நாம் கற்றுக் கொள்வதற்கு சில பாடங்கள் இதில் இருக்கவே செய்கிறது. ஒரு புதிய வருடத்தை காண தேவன் கிருபை நமக்கு செய்திருக்கிறார். 2020 – ல் நாம் கேள்விப்பட்ட காரியங்கள் அனைத்திலிருந்தும் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்தார். அந்த தேவன் நம்மிடம் இந்த ஆண்டில் என்ன எதிர்பார்க்கிறார் ?

ஒருவேளை தேவன் இன்று நம்மோடு வழக்காடுவார் என்றால் எப்படியிருக்கும் ? 2020 – ம் ஆண்டு முழுவதும் உன்னை வழி நடத்திக் காப்பாற்றி வந்தேன். அதை நினைத்துக்கொள் என்று கூறி, நம் குறைகளை சுட்டிக்காட்டி வழக்காடுவார்.

அப்படியானால், நான் என்ன செய்ய வேண்டும்? மற்றும் தேவன் என்னத்தை நம்மிடம் என்னிடம் கேட்கிறார் என்ற கேள்வியையும் தான் கேட்க வேண்டும்.

பதில் மீகா 6 : 8 –ல் இருக்கிறது. ஆம், நாம் எப்படி வாழ வேண்டும், நம் செயல்கள் எப்படி இருக்க வேண்டும், என்று நமக்கு எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பலிகளைப்போல் காணிக்கையைப்போல் வெளிப்புறமாய் புறத்தோற்றமளிக்கும். காரியங்களை செய்யாமல், முழு இடுதயத்தோடும் முழு மனதோடும், முழு பலத்தோடும் நம் சிந்தை, செயல், நடக்கை ஆகிய இவை எல்லாவற்றிலும் உண்மை இருக்க வேண்டும். நீதி பரிபாலனம் செய்யவேண்டும். தாழ்மை எல்ல மட்டங்களிலும் இருக்க வேண்டும். ஏனெனில், தேவன் நம் இருதயத்தைப் பார்க்கிறார்.

இரக்கமும், நீதியும், நியாயமும் தேவனுடைய குணாதிசயங்கள் எனவே, அதை நம் வாழ்விலும் பிரதிபலிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மனத்தாழ்மை நம் இரட்சகராகிய இயேசுவின் முக்கியமான ஒரு பண்பு. எனவே, அதையும் நம் அன்றாட வாழ்வில் செயல்படுத்த வேண்டும். அப்பொழுது தான் நம் வாழ்க்கையின் மூலம் பிறருக்கு தேவனை பிரதிபலிக்க முடியும்.

இந்தப் புதிய ஆண்டில் தேவன் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கும் உண்மையான கிறிஸ்துவ வாழ்க்கையை வாழ முடிவெடுப்போம். தேவன் நமக்கு நிச்சயம் உதவி செய்வார்.

மீண்டும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

....Happy 2021...

---

## எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா ?

**பாவ மன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது ஒரு எளிமையான செயலாயிருந்தாலும் கூட பெரும்பாலான மதப்போதகர்களால் ஏன் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது, குழப்பப்படுகிறது மறுக்கப்படுகிறது? குழப்பத்தால் மறுபிறப்பை தடுக்க முடியும் என்பதை சாத்தான் அறிந்திருப்பதால் அப்படியிருக்குமோ?**

சிறுவர் பகுதி

# கானானிய ஸ்திரீ

Dr. பிரெய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்! நீங்கள் எல்லோரும் நலமாயிருக்கிறீர்கள் என்றும் எங்கள் கட்டுரைகளை வாசித்து, உங்கள் அன்றாட வாழ்வில் அவைகளை நடைமுறைப்படுத்துகிறீர்களென்றும் நம்புகிறோம். புது வருடம் தொடங்கியிருக்கிற படியால் தேவனிடத்தில் உறுதியான விசுவாசம் வைத்து நல்ல பிள்ளைகளாகியிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மத்தேயு 15:21–28 வசனங்களில் ஒரு கானானிய ஸ்திரீ பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்த தன் மகளை சுகப்படுத்தும்படி இயேசு கிறிஸ்துவிடம் கெஞ்சிக்கேட்டபோது, தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினாள் என்று பார்க்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல என்று சொல்லி அவள் விசுவாசத்தை சோதித்தார் (வசனம் 24) ஆனால், அந்த ஸ்திரீ முழு விசுவாசத்தோடே ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்று பதிலளித்தாள். அவர் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்து அவள் தன் மகளை சுகப்படுத்துவார் என்று விசுவாசித்தாள் அந்த ஸ்திரீயின் விசுவாசம் அவளுடைய மகளை சுகப்படுத்தியது.

எனவே சிறுபிள்ளைகளே, நம் விசுவாசம் உறுதியானதாக இருந்தால் அது மலைகளையும் அசைக்கும் (மத்தேயு 17:20) நீங்கள் கர்த்தருடைய நற்கிரியைகளில் ஈடுபட வேண்டும். ஏனென்றால், கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது (யாக்கோபு 2 : 17). தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ! ✝

அன்புடன்,
உங்கள் பிரெய்ஸி அக்கா.

**சிறுவர்களுக்கான வேதவினாப்போட்டி (மத்தேயு 15 : 21-28)**

- அந்த புறஜாதிஸ்திரீ எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?
- அவருடைய பிரச்சனை என்னவாக இருந்தது ?
- சீஷர்கள் இயேசுவினிடத்தில் என்ன சொன்னார்கள் ?
- இயேசு கிறிஸ்து அந்த ஸ்திரீயினிடத்தில் என்ன சொன்னார் ?
- இயேசுகிறிஸ்து நாய்க்குட்டிகள் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

# சத்தியம் சாத்தியமே

Bro. பென்னி மார்ட்டின்

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நலநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இவ்வுலகம் முன்னெப்போதையும் விட மோசமாகிவிட்டது நாசமாகிவிட்டது என்பதற்கு ஆதாரமாக இவ்வுலகில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்கள் உள்ளன. இன்றைய நாட்களில் விரல் நுனியில் பாவங்கள் அரங்கேறிவருவதை நாம் அறிந்திருக்கிறோம். பலர் பாவம் எனும் வார்த்தையை பயன்படுத்துவதற்கே தயங்கிஅதைத்தவறு என்றழைத்து அதன் கோரத்தை குறைக்க விரும்புகிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று வேதவானங்கள் சொல்கின்றன. (பிலிப்பியர் 2 : 15) தேவனால் அருமையாகவும், அழகாகவும் படைக்கப்பட்ட இவ்வுலகம் அதன் அடையாளத்தைத் தொலைத்துஅழிந்து போசக் கொண்டிருப் பதற்கான காரணம் இவ்வுலகத்தின் மக்கள் சத்தியத்தை சற்றும் நேசிக்காமல் இருப்பது தான். சத்தியம் என்றால்என்ன ? இவ்வுலகத்தின் மக்களிடம் அதைக்குறித்து விவாதித்தால் அவர்கள் ஆணையிடுதல் எனும் பொருளை பொறுப்பற்ற முறையில் கொடுப்பார்கள். சத்தியம் என்பதை ஒரு சமஸ் கிருதச்சொல், தமிழில் உண்மை என்பது அதன் பொருளாக இருக்கிறது. பொய்களால் பொதியப்பட்ட பொல்லா உலகில் பொய்க்குப் பிதாவாகிய பிசாசு சத்தியம் எனும்வார்த்தையையே ஏறக்குறைய மக்களிடம் மறக்கடித்துவிட்டான் இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை இப்பாழாய்ப் போன உலகில் தூக்கிப்பிடிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

சத்தியத்தை தேடிக்கொண்டிருக்கிற ஒருவரை சந்தித்து அவருக்கு சத்தியத்தை அறிவித்து அவரை ஆதாயப்படுத்துவது எத்தனை ஆனந்தமான காரியமாயிருக்கிறது.! பொருளாதார ரீதியாக இருந்தாலும் சரி விஞ்ஞான ரீதியாக இருந்தாலும் சரி, மத ரீதியான காரியமாக இருந்தாலும் சரி இறுதியில் சத்தியம் தான் கணக்கில் எடுத்துகொள்ளப்படும். இறுதியில் சத்தியம் அல்லது வாய்மையே வெல்லும், நம்முடைய பரிசுத்த வேதாகமத்தின்

பக்கங்களில் தேவனுடைய வார்த்தை என்னும் உண்மை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நாம் அதனிடத்தில் பயத்துடனும் பக்தியுடனும் வரும்போது தேவ சித்தத்தை அறிந்துகொள்ள முடியும் இப்போது சத்தியம் நித்தமும் நம் வாழ்வில் எப்படிப்பட்ட தாக்கத்தையும் தாற்பரியத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் நாம் சத்தியத்தை எப்படிக் கையாள வேண்டுமென்றும் பார்போம்.

**1. நாம் சத்தியத்தை நேசித்தால் அதை வாசிப்போம்.**

நாம் சத்தியத்தை நேசிப்பது உண்மையாக இருந்தால் அதற்கென்று நேரம் எடுத்து அதை வாசிப்போம். அப் போஸ்தலனாகிய பேதுரு நாம் சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை ஒரு சிறு குழந்தை பால் குடிக்க எவ்வளவு விரும்புகிறதோ, ஏங்குகிறதோ அதேபோல் நாமும் விரும்ப வேண்டுமென்றும் அது நம்முடைய விருப்பமாக மட்டுமல்லாமல் நமக்கு அது அவசியமான ஒன்றாக அன்றாடம் இருக்க வேண்டுமென்றும் கூறுகிறார் (I பேதுரு 2 : 3) நாம் திருவசனமாகிய ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருந்து அதை உட்கொண்டால் தான் ஆவிக்குரிய பிரகாமாக வளரமுடியும். ஆவிக்குரிய பிரகாரமாக கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்வதற்கு வேறு எந்த மார்க்கமோ மாதிரியோ இல்லை மேலும் II பேதுரு 1 :5–7 வசனங்களில் இடம்பெற்றிருக்கிற கிறிஸ்துவபண்புகளை நம்முடையதாக்கிக்கொண்டால் பண்பட்ட கிறிஸ்தவர்களாக இருந்து பவித்ர தேவனுடைய பார்வையில் பட முடியும், ஆவிக்குரிய பிரகாரமாக வளரவும் முடியும். நாம் தேவனுடைய வார்த்தையை உண்மையாகவே நேசிக்கிறவர்களாக இருந்தால் நாள் முடிவதும் அது நம் தியானமாக இருக்க எந்த தியாகத்தையும் செய்யநாம் ஆயத்தமாயிருப்போம் (சங்கீதம் 119 : 97) நாம் பல பிரசங்கங்களிலே, வேதபாடவகுப்புகளிலே, ஆவிக்குரிய கூட்டங்களிலே தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டாலும் தனிப்பட்ட வேத தியானத்திற்கு இணையாக நாம் எதையும் சொல்லவே முடியாது.

**2. நாம் சத்தியத்தை நேசித்தால் அதற்கு ஆரதவாகப் பேசுவோம்**

இன்று உலகத்தின் மக்கள் தேவனுடைய வார்த்தைகளிலிருந்து விலகி எவ்வளவு தூரம் போகமுடியுமோ அவ்வளவு தூரம் போக விரும்புகிறார்கள். அவர்கள் தங்களால் முயந்தவரை தேவனுடைய வார்த்தையை எதிர்க்கிறார்கள் வேதாகமத்தைப் பிரதி தினமும் பின்பற்றுகிறோம் என்று சொல்கிறவர்கள் கூட

அதில் சில ஓட்டைகளைக் கண்டுபிடித்து தங்கள் செயல்பாடுகளை நியாயப்படுத்த விரும்புகிறார்கள். நாம் உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறவர் களாக இருந்தால், மற்றவர்கள் அதைக்குறித்து இழிவாகப் பேசும்போது நாம் அதற்காக நின்று ஆதரவாகப் பேச வேண்டும். தாராளமயக் கொள்கைகள் ஏராளமாய் மலிந்து கிடக்கின்ற இந்நாட்களிலே நாம் அவைகளை நம் முழு பலத்தோடு எதிர்க்க வேண்டும். வேத வாக்கியங்கள் சில வேளைகளில் பரிகாசத்திற்குட்படுத்தப்படும் போது அதினால் நமக்கென்ன என்று மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் கடந்து செல்கிறோம். தேவனுடைய வார்த்தை மீது கேள்விக்கணைகள் தொடுக்கப்படும் போது, அது தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் வேத போது நாம் அதை கடுமையாக கடந்து கொள்ள வேண்டும். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டது. என்பதற்கு நமக்கு விஞ்ஞானப்பூர்வமாகவும் சரித்திரப்பூர்வமாகவும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. (II தீ மோத்தேயு 3:16) எனவே நாம் எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமோ அல்லது வெட்கப்பட வேண்டிய அவசியமோ இல்லை. இன்று பல கிறிஸ்தவர்கள் வேதவ சனங்களை வைத்து பரிகாசம் செய்பவர்களோடு சகவாசம் வைத்துக்கொள்கிறார்கள். எப்படி அவர்களால் இப்படி செய்ய முடிகிறது என்று புரியவில்லை வேதவாக்கியங்களை பரிகாசம் செய்யும் அவர்களை வேண்டாமென்று பகைக்க வேண்டாமா ? இன்று பலர் தங்கள் அபிமான அரசியல்வாதிகளுக்காக, நடிகர்களுக்காக விளை யாட்டு வீரர்களுக்காக தங்கள் வாழ்க்கைகயை அர்ப்பணிக்கும் போது விசுவாச வீரர்களாகிய நாம் ஜீவனுள்ள வார்த்தையை வைத்துக்கொண்டு ஏன் சும்மா இருக்க வேண்டும்? சத்தியம் தாக்குதலுக்கு உட்படுத்தப்படும் போது அதற்கு ஆதரவாக ஆர்வத்துடன் பேச வேண்டும். அதே போல் நம்மிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து நம்மிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். (I பேதுரு 3:15)

**3. நாம் சத்தியத்தை நேசித்தால் அதற்கு கீழ்ப்படிவோம்**

சிலரிடம் உரையாடும் போது தாங்கள் சத்தியத்தை அதிகமாக நேசிப்பதாகவும் அதற்காக எதையும் செய்வதாகவும் வீரவசனம் பேசுவார்கள் ஆனால் அதற்குக் கீழ்ப்படிவதென்று வரும் போது மெத்தனப்போக்கை கடைப்பிடிப்பார்கள். நாம் உண்மையாகவே சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் அதற்கு கீழ்ப்படிய

வேண்டும். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (யோவான் 14 : 15) தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வேத அறிவினாலும் கீழ்ப்படிதலினாலும் அறியப்பட வேண்டும். அதைவிட நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறோம் என்று அறியப்பட வேண்டும். யாக்கோபு ஆசிரியர் இதைப் பற்றிச் சொல்லும்போது அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திர மல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்னத்தினாலெனில் ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால் கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான் அவன் தன்னைத்தானே பார்த்து அவ்விடம் விட்டுப் போனவுடனே தன் சாயல் இன்னதென்மதை மறந்து விடுவான் என்று சொல்கிறார் (யாக்கோபு. 1 : 23–24)

பிரியமானவர்களே ! சத்தியம் நமக்கு எதைப்போதிக்கிறதோ அதை அப்படியே நாம் செய்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். சத்தியத்தை நம் சூழ்நிலைக்கேற்ப திரித்துப்பேசுதோ அதை மாறுபாடாகப் போசுவதோ சத்தியத்தை நேசிப்பவர்களுக்கு ஏற்றதல்ல நாம் உண்மையாகவே சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் அதை நமக்குள்ளேயே அடக்கிவைக்காமல் பலரிடம் பகிர்த்துகொள்வோம்.நாம் சத்தியத்திக்குக் கீழ்ப்படியும் போது தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பிரியமானவர்களாயிருப்போம். நாம் சத்தியத்தின்படி நடக்க தீர்க்கமாக தீர்மானிக்கும்போது பிசாசானவன் நம் பாதைகளில் பல பாடுகளையும் தடைகளையும் கொண்டு வருவான் நாம் அவைகளைப் பொருட்படுத்தாமல் அவைகளைத் தகர்த்தெறிந்து தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது அதற்கான பலன் இப்பூமியிலும் பரலோகிலும் நமக்கு உண்டு என்பது நிச்சயம். இவ்வுலகில் பலர் திரைக்கடல் ஓடி திரவியம் தேடுகிறார்கள் அவனால் சத்தியத்தை தேடுகிறார்களா? வாழ்க்கையில் தேவையற்றவைகளைத் தேடுகிற நாம் சத்தியத்தை தேடுகிறோமா? அதை நாம் நேசிக்கிறோமா? சத்தியத்தை நாம் நேசித்தால் அதை வாசிப்போம், அதை நேசித்தால் அதற்கு ஆதரவாக ஆர்வமாகப் பேசுவோம் அதை நேசித்தால் அதற்கு மனதாரக் கீழ்ப்படிவோம். நாம் சத்தியத்திற்காக இவைகளைச் செய்யும்போது சத்தியத்தின் தேவனால் வாக்குதத்தம் செய்யப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் அபரிதமாக பெற்றுக் கொள்வோம். ✝

# *கிறிஸ்துவின் வாழ்க்கை*

**Bro. பாண்டியன்**

**நா**ம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று வேதம் சொல்வதால் நாம் உலகத்தாரைப் போல் வாழ முடியாது. உண்மையான தேவன் யார்? என்பதையும் அவர் அனுப்பினவராகிய இயேசுவையும் நாம் அறிந்து பின்பற்றுவதால் நம் வாழ்க்கை வித்தியாசமானது. செல்வச் செழிப்பே பிரதானம் என்று அன்றும், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். இந்த மனுஷரைப் பார்த்து இயேசு சொன்னார். உலக முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் அந்த ஒன்றான மெய்த்தேவனையும், அவருடைய குமாரனையும் அறியாத வாழ்க்கை, வெறுமை யானது, ஒன்றுக்கும் பிரயோஷனமற்றது என்று.

இவ்வுலக மக்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற அரசியல் தலைவர்கள், தந்துவ ஞானிகள் மற்றும் பல போதனைகளைப் பின் பற்றுகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் நம் எஜமானராக இயேசுவை ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசத்தை பின் பற்றுகிறோம் அப்படிப் பின்பற்ற கூடுதலாக நமக்கு அப்போஸ் தல உபதேசம் கொடுக்கப் பட்டுள்ளது. பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிற இந்த உலகில் பொறுமையோடே இயேசுவை நோக்கி ஓடுங்கள் என்கிறது நம் அப்போஸ்தல உபதேசம்.

ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கைக்கும் மேகம் போன்ற திரளான சாட்சிகள் வேதத்தில் உள்ளது என்றும் அதன் காரணமாக நாம் அவர்களை கவனமாக ஆராய்ந்து நோக்கிப் பார்த்து, நம் பாரங்களை தள்ளிவிட்டு நம் ஆண்டவரை நோக்கி பொறுமையோடே ஓட வேண்டும் என்றும் பார்க்கிறோம் [எபி.12:7] நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்காக நமக்கு முன்பாக வாழ்ந்த தேவபக்தியுள்ள மனுஷர் அநேகரை நமக்கு முன் மாதிரியாக வேதம் வைத்துள்ளது. அதே போல எப்படிவாழக்கூடாது என்பதற்கும் பலருடைய முன்னுதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. [I கொரி 10:11] ஆக, நாம் ஏறிட்டு பார்க்க் வேண்டியது எதிர் வீட்டாரோ, பக்கத்து வீட்டாரோ அல்ல! வேதத்திலுள்ள தேவபக்தியுள்ள ஜனங்களே நம்மைச் சூழ்ந்துள்ளார்கள். அவர்களையே நாம் பார்க்க வேண்டும்.

நம் கிறிஸ்தவ ஓட்டத்தைத் தடை செய்யும் முக்கியமான விஷயம் இதயத்தின் பாரங்கள். அவைகளைத் தள்ளிவிட்டு ஓட வேண்டும் என்பதே நம் பொறுப்பு. லூக்கா 21:34 ல் ஆண்டவர் சொன்னது, உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், லவுகீகக் கவலைகளினாலும், வெறியினாலும், பாரமடையாபடி எச்சரிக்கையாயிருங்கள், உணவு விஷயத்தில் டாக்டர்களும் அளவாக உண்ணும்படியாக ஆலோசனை சொல்கிறார்கள். இங்கு குறிப்பிடப்படும் வெறியினாலும் என்பது மதுபான வெறியைக் குறிக்கிறது (எபே 5:18). குடிப்பழக்கம் குடும்பத்தை மாத்திரமல்ல, சபை வாழ்க்கையையும் பாழாக்கும். சிற்றின் பத்திற்கு ஆசைப்பட்டு அநேகர் பேரின்பத்தை நித்திய ஜீவனை ) இழந்து போவதைப் பார்க்கிறோம். மாத்திரமல்ல உலகக் கவலைகள் நம்மை பாரப்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு சபைகூடுதலுக்கு வாழ்வில் முதலிடம் கொடுப்பது மிக அவசியமாகும்.

நம் வாழ்க்கை இச்சையடக்கத்தோடே ஓடக்கூடிய ஒரு பந்தயம் என்று I கொரி 9:24,25 வாசிக்கின்றோம். கலங்கடிக்கும் மிகப்பெரிய சூழ்நிலை இஸ்ரவேல் ஜனங்களுக்கு செங்கடல் அருகே நேரிட்ட போது மோசே சொன்னார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். அதே தேவனாகிய கர்த்தரை நாம் தெய்வமாகக் கொண்டிருந்தால் வரும் புதிய ஆண்டிலும் நமக்காக நம் தேவன் யுத்தம் செய்வார் என்று விசுவாசிப்போம்.

மேலும், அடங்கியிருங்கள் என்ற பதம் அமைதலாயிருங்கள் பதட்டமடையாதிருங்கள் என்றும், ஒரு வேளை உதாசீனம், அவமானம் போன்ற சூழ்நிலை வரும் போது எரிச்சல், கோபம் அல்லது மனச்சோர்வு போன்ற உணர்வுகளால் நாம் தூண்டப்படாத படிக்கு அடங்கியிருக்க வேண்டும் என்பதையும் குறிக்கும். ஏனெனில், ஒருவனை தாழ்த்தி ஒருவனை உயர்த்தும் நியாயாதிபதியாக தேவன் இருக்கிறார் (சங் 75:7) இனி நாம் உயர்த்தப்பட என்ன செய்ய வேண்டும் என்பதை வேதத்திலிருந்து இன்னும் சில காரியங்களைப் பார்க்கலாம்.

கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார் என்று சங் 147:6ல் காண்கிறோம். கோபம் மாம்சத்தின் கிரியையாக

இருப்பதால் நாம் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க முடியாது என்றும் யாக்கோபு நிருபத்தில் வாசிக்கின்றோம். எல்லோருக்கும் பிரச்சனைகள் உண்டு என்பதை வீட்டுக்கு வீடு வாசற்படி என்று சொல்வார்கள். ஆக, எல்லோருக்கும் ஏதாவது சிக்கல்கள் நேரிட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் தேவனிடத்தில் பிரியமாயிருந்தால் அவர் உங்களை விடுவித்து உயர்ந்த அடைக் கலத்தில் வைப்பார் என்று சங் 91:14ல் காண்கிறோம். ஆகவே சபை கூடுதலை விட்டு விடாமல் தேவனிடம் வாஞ்சையாய் இருப்போமாக.

தேவனுடைய வல்லமையின் அதிகாரத்தில் நாம் முழு நம்பிக்கையாய் இருக்கும் போது நாள்தோறும் நமக்கு மகிழ்ச்சியும் அவருடைய தயவினால் நாம் உயர்த்தப்படுவோம் என சங் 89:15, 16ல் வாசிக்கின்றோம். எவ்வளவு உயரத்தில் இருந்த குதித்தாலும் தண்ணீரில் விழும் போது காணப்படுவதில்லை. அது போல் வாழ்வில் எந்த சூழ்நிலை வந்தாலும், என் தேவன் என்னோடே இருக்கிறார், என்னைக் கைவிடமாட்டார் என்ற தேவனைப் பற்றிய அறிவும் நம்பிக்கையும் நமக்கிருந்தால் நிச்சயம் நாம் உயர்த்தப்படுவோம். நம்முடைய பெலன் குறைவுள்ளது. கர்த்த ருடைய நாமமே பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான் என்கிறது வேதம் (நீதி 18:10) குடும்பத்தில் பெரியவர்களுக்கும், சமுதாயத்தில் அதிகாரங்களுக்கும் விசேஷமாக வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைக்கும் கீழ்ப்படிந்தால் உயர்வு நிச்சயம் உண்டு (உபா 4:40).

மேட்டிமை சனகரீப், ஆமான் போன்றவர்களை தாழ்த்தியது. பொறுமை யோசேப்பு, தானியேல் போன்றவர்களை உயர்த்தியது. ஆக, நாம் ஏற்ற காலத்தில் உயர்த்தப்பட தேவனுக்கு நம்மை ஒப்புவித்து அவருடைய வசனத்துக்கு மனந்திரும்பி நடக்கும் போது தேசத்தின் நன்மையைப் புசிக்க தேவன் கிருபை செய்வார். நம்மை நேசித்து விலகாமலும், கைவிடாமலும் இருக்கிற தேவன் தொடர்ந்து இந்த புத்தாண்டிலும் வழி நடத்துவாராக. ஆமென்.

# நம்மைக் குறித்து தேவனுடைய விருப்பம்

**Bro. K.M. பிலிப்**

**ச**ந்தோகத்திற்குரிய தேவனுடைய பிள்ளைகளே! இப்புத்தாண்டில் துவக்கத்தில் உங்களை இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். நம்மை உண்டாக்கிய தேவாதி தேவனின் நம்மைக்குறித்த விருப்பம், கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோசமாயிருங்கள் (பிலி 4:4) என்பதே. மேலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன் என்று (நெகே 8:10) நம்மை உற்சாகப்படுத்துகிறார். புல்லுக்கும், புகைக்கும் ஒப்பான அற்ப ஆயுசுள்ள நாம் விரும்புவதே நம் வாழ்க்கையில் நிறைவேறுகிறது என்றால், நித்திய ஜீவனும், நித்திய வல்லமையும் உடைய தேவாதி தேவனின் விருப்பம் நிறைவேறாதா? அவர் விரும்புவது மட்டுமல்ல, அதற்காக அவர் செய்யும் செயல்களும் இதை உறுதி செய்கின்றன. கர்த்தாவே உமது செயற்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர். உமது கரத்தின் கிரியைகளின் நிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன் (சங் 92:4)என்ற இந்த அறிக்கையின் மூலம் தேவனுடைய விருப்பத்தின் நிறைவேறுதலை வெளிப் படுத்துகிறார். ஆம், முதல் மனிதர்கள் ஆதாம், ஏவாளை படைக்கும் முன்பே அவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருப்பதற்காக சகலத்தையும் நேர்த்தியாய் படைத்து வைத்தி ருக்கிறார். மேலும், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபைகளையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (II கொ.9:8) என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார். நாம் ஆராதிக்கிற தேவன் வாக்கு மாறாதவர்; பொய்யுரையாதவர்; அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும்; தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

சர்வவல்லவருடைய இவ்வார்த்தைகள் இப்புதிய ஆண்டில் நிச்சயம் நம்மை உற்சாகப்படுத்தும். எப்பொழுதும் சந்தோச மிருக்கச் செய்யும் என்று விசுவாசிப்போம்.

அன்பானவர்களே! தேவன் தன் விருப்பத்தை நம்மில் நிறைவேற்றும்படியாய் அவரே ஆலோசனையும் கொடுக்கிறார். கருத்துடன் கற்றுக்கொள்வோம். கர்த்தருடைய கற்பனைகளை

கைக் கொள்கிறவன் ஒரு தீங்கையும் அறியான் (பிர. 8:5). ஒரு தீங்கும் இல்லையென்றால் **எப்பொழுதும் சந்தோஷம் தான்.** நாம் ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்; மனிதனால் செய்ய முடியாத எந்த ஒரு செயலையும் செய்யும் படி தேவன் நமக்கு கற்பனைகளாகவோ, ஆலோசனைகளாகவோ கொடுக்கமாட்டார். எ.கா. ஞானஸ்நானம் – யோவான் ஸ்நானகனால் முதல் முதல் ஞானஸ்நானம் யோர்தான் நதியில் தான் கொடுக்கப்பட்டது. இயேசுவின் சீடர்களும், **இயேசுவும் கூட** யோர்தான் நதியில் தான் ஞானஸ்நானம் பெற்றனர். ஆகவே, எல்லோரும் யோர்தான் நதியில் தான் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றால்..... இதற்கு கீழ்ப்படிய எல்லோராலும் முடியுமா? சரி, ஏதாவது ஒரு ஆற்றில் பெற வேண்டும் என்றாலும் கடினம் தானே! அல்லது பன்னீரில், சுடுதண்ணீரில் என்றாலும் சற்று சறுக்கல் தானே! ஞானமுள்ளதேவன், ஞானஸ்நானம் **தண்ணீரில்** எடுங்கள் என்றே கட்டளையிட்டிருக்கிறார். தண்ணீர் இல்லாத இடத்தில் மனிதன் வாழ்கிறானா? எவ்வளவு எளிமை என் நுகம். இலகுவானது என்பதே உண்மை. **பாடு** என்பதில் ஊமையன் கூடப்பாட முடியும் கொடு என்பதில் மிகவும் இயலாதவர்கள் கூட இருப்பதில் கூடப் பாட முடியும். கொடு என்பதில் மிகவும் இல்லாதவர்கள் கூட மனதில் நியாயமித்ததை உற்சாகமாகக் கொடுக்க முடியும். ஆராதிப்பதில் – வாரத்தின் முதல் நாள் – இருபத்து நான்கு மணி நேரத்தில் 2,3 பேர் கூடி எங்கு வேண்டுமானாலும் ஆராதிக்க முடியும். இவை எல்லாவற்றிற்கும் தேவை இருதயம் மட்டுமே. இருதயம் இல்லாதவர்கள் உண்டா? தேவனுடைய இத்தகு விருப்பங்கள் நிச்சயம் எல்லோராலும் நிறைவேற்ற முடியும். இன்றும் என்றும் நிறைவேறிக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே **கர்ததருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்** என்ற தேவ விருப்பம் நிச்சயம் நம்மில் நிறைவேறும். நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவான்.11:40) **எப்பொழுதும்** என்றால் 24 மணிநேரமும். ஆம் தூங்கும்போதும் கூட நிம்மதியான, சந்தோஷமான தூக்கம் கிடைக்கும். இதற்காக தேவன் செய்வதை பாருங்கள். நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக் கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார். சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப்பண்ணுகிறீர் (சங் 3:5; 4:8). நாம் வாழ்ந்திருந்தாலும், தாழ்ந்திருந்தாலும் மன ரம்மியமாய் இருக்க முடியும். ஏனெனில், நம் வாழ்க்கையில் பெருமழை பொழியும். பெருவெள்ளம் வரும். காற்று அடிக்கும்;

மோதும். ஆனால், நம் விசுவாச வாழ்க்கை விழுந்து போகாமல் நிலை நிற்கும் (மத் 7:25). காரணம் நம் விசுவாசம் இயேசுவின் சத்திய வார்த்தையாகிய கன்மலையின் மேல் கட்டப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திருக்கிற வனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் (II யோவான்:9). இருவரும் நமக்குள் **இருந்தால் எப்பொழுதும் சந்தோஷமே.**

அன்பானவர்களே! மனிதன் தன்னை எப்பொழுதும் சந்தோஷமாய் வைத்துக் கொள்ள பல குறுக்கு வழிகளில் மயற்சி செய்கிறான். ஆம், முற்பிதாக்களில் ஒருவரான யாக்கோபு, தமையனை, தந்தையை ஏமாற்றி சகல ஆசீர்வாதங்களையும் பெற்றிருந்தாலும் அதன் மூலம் சந்தோஷத்தை பெற முடியவில்லை. 147 ஆண்டுகள் வாழ்ந்தும், அவன் அனுபவித்ததை அறிவிக்கிறார், கேளுங்கள். அதற்கு யாக்கோபு; என் ஆயுசு நாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதாயிருக்கிறது. என்று புலம்புகிறதைத்தான் காணமுடிகிறது. (47:9)கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே வேதனையை கூட்டார் (நீதி 10:2-20) என்பதை புரிந்து கொள்வோம். சந்தோசம் என்பது பணத்தை பொறுத்தல்ல. மனதைப் பொருத்ததே, மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும் சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம் ( நீ 15:1316). மேலும், மனுஷர் யாவரும் புசித்துக் குடித்து தங்கள் சகலப் பிரயா சத்தின் பலனையும் அனுபவிப்பது தேவனுடைய அனுக்கிரகம் ( பிர 3:13) என்று ஞானி தெளிவாய் வெளிப்படுத்திவிட்டார்.

இப்பஜ தேவ அனுக்கிரகத்தைப் பெற்று, செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சி விதைக்கப்பட்டிருக்கிறது என்பதை (சங் 17:11) புரிந்து கொண்டு செம்மையானவைகளை விதைத்து 100% அறுவடை செய்து பெயருக்கேற்ப மகிழ்ச்சியாய் வாழ்ந்த ஈசாக்கை சுருக்கமாகப் பார்ப்போம். 1. கீழ்ப்படிகிறவன் : தன்னையே பலியாகக் கொடுத்து, கிறிஸ்து பிதாவுக்கு சிலுவை பரியந்தம் கீழ்ப்படிந்தார். இப்படி கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியும் பொழுது, நாம் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்வோம் (I யோவான். 3:22). இப்படி எல்லாம் கிடைத்தால் சந்தோசத்திற்கு குறைவிருக்குமா? ஆதி 26:12-31 மேலும், ஈசாக்கு தியானிக்கிறவனாகவும், ஜெபிக்கிற வனாகவும், சமாதானத்தை விரும்புகிறவனாகவும், தேவனுக்கு முதலிடம் கொடுப்பவனாகவும், தேவனுக்கென்று

கொடுப்பவ னாகவும் தேவனுடைய கற்பனைகளின்படி வாழ்ந்ததால், ஈசாக்கு விதைத்தான்; கர்த்தர் அவனை **ஆசீர்வதித்ததினால்** நூறுமடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவனாகி வர வர விருத்தியடைந்தான் [26: 12,13]. தேவ அநுக்கிரகத்தை பெற்று சந்தோஷத்தை அனுபவித்தான்.

இப்புத்தாண்டின் துவக்கத்தில் இருக்கும் நாம் ஒரு முடிவுக்கு வருவோம். ஈசாக்கைப் போல தேவனுக்குப் பிரியமான செயல்களை நாமும் செய்வோமானால், பிரியமானவனே! நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு! [III யோவான் 2] என்று தேவன் நம்மை வாழ்த்துவார். இதனால் தேவ விருப்பம் நம்மில் நிறைவேறி நாம் எப்பொழுதும் கர்த்தருக்குள் சந்தோஷ மாயிருக்க முடியும். தேவாதி தேவனின் விருப்பம் உங்களில் நிறைவேற இயேசுவின் நாமத்தில் வாழ்த்தி நிறைவு செய்கிறேன். ஆமென்!!!

---

## நாளும் நடப்பும்

1. தமிழகத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகள் திறக்கப்பட்டுள்ளன.
2. மத்திய அரசின் விவசாய சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் தொடர் போராட்டம்.
3. நாடு முழுவதும் கொரோனா தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.
4. இந்தியப்பொருளாதாரம் இன்னும் 6 மாதத்தில் புத்துயிர்ப் பெறும்.
5. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோபைடன் பதவி ஏற்றார்.
6. இந்தியா ஆஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

# உபதேசங்கள் தேவனுடையது

Bro. **ஆசீர்வாதம்**

**உபதேசங்கள் தேவனுடையது என்பதற்கு இயேசுவின் சாட்சி**

❀ **யோவான் 7: 16, 17** – இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக; என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்.

❀ **யோவான் 14: 10** – நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்த கிரியைகளைச் செய்து வருகிறார்.

❀ **யோவான் 14 : 24** – நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

❀ **யோவான் 12 : 49, 50** – நான் சுயமாய் பேசவில்லை . நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.


உபதேசங்கள் என்னுடையது அல்ல என்று இயேசுவானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறார். மேலும், உபதேசங்கள் தன்னை இவ்வுலகத்துக்கு அனுப்பின பிதாவினுடையது என்பதையும் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுகிறார். இயேசுவானவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும், பரிசுத்தமும் மீட்புமாயிருக்கிறார் (1கொரி 1 : 31) என்றும், மேலும் அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது என்றும் வேதம் சொல்லுகிறது. (கொலோ 2 :3)


தேவனுடைய ஞானம் அறிவும் இயேசுவுக்குள் பரிபூரணமாய் வாசமாயிருந்தும், உபதேச விஷயத்தில் என் சுயமாய் எதையும் சொல்லவில்லை என்றும், நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்கள் என்னுடையதல்ல என்றும் இயேசுவானவர் சொல்லுகிறார். இயேசுவினிடத்தில் எவ்வளவு நீதியும் எவ்வளவு உண்மையும் இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள். சுயமாய் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை [யோவான் 7 : 18]. ஆம், இயேசுவினிடத்தில் அநீதியில்லை . அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் தம்முடைய சுயமாய் ஒன்றும் பேசாமல் தன்னை அனுப்பின பிதாவினுடைய வார்த்தைகளைப் பேசி தேவனுக்கு மகிமையை தேடுகிறவராயிருக்கிறார். இப்படியிருக்க உபதேசங்கள் தேவனுடைய சித்தத்தினால் உண்டானவைகள். மனுஷன் எவைகளைச் செய்தால் அவனுக்கு நித்திய ஜீவன் உண்டாகும் என்று தேவன் விரும்புகிறாரோ அவைகளையே இயேசு கிறிஸ்துவின் மூலம் உபதேசங்களாக கட்டளையிட்டிருக்கிறார். எனவே, பரலோகத்தில் பிரவேசிக்க விரும்புகிறவன் தேவனுடைய சித்தத்தின்படி செயல்பட வேண்டும். மற்றபடி இயேசுவைக் கர்த்தர் என்று சொல்லுவதினால் அவனுக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை என்பதை இயேசு திட்டவட்டமாகச் சொல்லுகிறார் [மத் 7 : 21].

என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும் அதாவது, தேவனுடைய சித்தத்தை தனக்குள் நிறைவேற்றாத எந்த மனிதனும் தேவன் எதிர்பார்க்கிற கனியைக் கொடுக்க முடியாது. இப்படிப்பட்ட கனி கொடாத மரமெல்லாம் வேரோடே பிடுங்கி அக்கினியிலே எரிந்து விடப்படும். இயேசுவானவர் தேவனால் நடப்பட்ட மெய்யான திராட்சைச் செடியாகவும் பிதாவானவர் தோட்டக்காரராகவும் இருக்கிறார். இயேசுவானவர் பிதாவாகிய தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்குள் நிலைத்திருக்கிறது போல நாம் இயேசுவின் மூலம் கொடுக்கப் பட்டிருக்கிற தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படிந்து இயேசுவுக்குள் நிலைத்திருக்கும்போது, தேவன் எதிர்பார்க்கிற கனிகளைக் கொடுக்க முடியும். அதனால் தேவன் மகிமைப்படுவார். இவ்விதமாய் தேவனுடைய சித்தம் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நமக்குள் நிறைவேற்றப்படுகிறது.

மற்றபடி இயேசுவானவர் உட்கார்ந்து யோசனைப் பண்ணி தம்முடைய சொந்த ஞானத்தைக் கொண்டு உபதேசங்களை உருவாக்கவில்லை அல்லது இயேசுவானவர் அநேக அற்புதங்களை செய்த வல்லமையுடைய மாபெரும் மனிதரானபடியால் எப்படியாவது ஜனங்கள் இயேசுவை பின்பற்றினால் போதும் என்பதற்காக அப்போஸ்தலருடைய கட்டுக்கதைகளால் உபதேசங்கள் உருவாக்கப்படவில்லை . அல்லது சபைகளின் போதகர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து கிறிஸ்துவ மார்க்கத்தை வளர்க்கவேண்டும் என்பதற்காக தங்களுக்கும் ஜனங்களுக்கும் எவையெல்லாம் இலாபமாக இருக்குமோ அவைகளை போதிப்பதும் உபதேசங்கள் அல்ல. உபதேசங்கள் ஜீவனுள்ள தேவனுடையது. அவைகள் பரத்திலிருந்து உண்டானவைகள். அவைகள் மனுஷனுக்கு நித்திய வாழ்வை கொடுக்கக்கூடியவைகள். ஆகையால், இயேசு தேவனுடைய கட்டளை மனுஷருக்கு நித்திய ஜீவனாயிருக்கிறது என்று அறிவேன் என்றும் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் (யோவான் 12 : 50) என்றும் சொல்லுகிறார். பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தனாயிருந்த மோசே நியாயப்பிரமாண கட்டளைகளை இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்தபோது நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி நான் உங்களுக்கு கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (உபா 4:2) என்று எச்சரிக்கிறான். மாம்சத்திற்குரிய சடங்காச்சாரங்களாகிய நியாயப்பிரமாணத்தின் தேவசட்டங்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் இத்தனை ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கும் போது, நாம் பிழைக்கத்தக்கதாக, நம்முடைய ஆத்துமாவின் வாழ்வுக்குரிய ஆவியின் பிரமாணங்களை குறித்து நாம் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள். என் கட்டளைகளின்படியே மனுஷன் செய்தால் அவைகளால் பிழைப்பான் (எசேக் 20 : 13) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm


Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm


For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026


# எங்களது இதர வெளியீடுகள்

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/ 2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**

















சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.